

மதவாதம், போதை ஒழிப்பு என்ற பொருளில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் செல்லும் சமத்துவ நடைபயணத்தின்போது, மதுரை – மேலூர் அருகே, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பங்கேற்று நேரில் வாழ்த்துத் தெரிவித்தக் காட்சி.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (11.01.2026) திருச்சிராப்பள்ளி கலை காவேரி நுண்கலை கல்லூரியில் நடைபெற்ற விழாவில் கல்லூரி சார்பில் தயாரிக்கப்பட்ட பொங்கல் பாடலை வெளியிட்டு மாணவ, மாணவிகளுக்கு “உலகம் உங்கள் கையில்” திட்டத்தின் கீழ் மடிக்கணினிகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே. சரவணன், மேயர் மு.அன்பழகன், திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் சாலை தவவளன், கலை காவேரி நுண்கலை கல்லூரி இயக்குநர் செயலர் எஸ்.லூயிஸ்பிரிட்டோ, முதல்வர் திருமதி.உமாமகேஸ்வரி, ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. மாணவர் அணி சார்பில் உதகையில் மோட்டர் பைக் பந்தயம்!

## ஆ.இராசா எம்.பி. பரிசு வழங்கி கவுரவித்தார்!

*உதகை, ஜன. 13 -*

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, நீலகிரி மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில், உதகை அரசு கலை கல்லூரி மைதானத்தில் மோட்டர் பைக் பந்தயம் (DIRT BIKE RACE) மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ தலைமையில் நடைபெற்றது, உதகை கிழக்கு நகர செயலாளர் ஜார்ஜ் வரவேற்றார்.



காலை முதல் பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளின் இறுதி போட்டியினை கழக துணை பொதுச்செயலாளரும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகள் மற்றும் பரிசுகள் வழங்கி வாழ்த்தினார்.

இதில் மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தம்பி இஸ்மாயில், Expo செந்தில், கூடலூர் தொகுதி பார்வையாளர் மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஷ் குமார், மாநில விளையாட்டு மேம்பட்டு அணி துணை செயலாளர் வாசிம் ராஜா, உதகை மேற்கு நகர செயலாளர் ரமேஷ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில்நாதன், மீனவர் அணி அமைப்பாளர் ராஜா, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் விவேக் பொன்தோஸ், அருண், பயாஸ், கிஷோக், நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆகாஷ், மாணவர் அணி நிர்வாகிகள் பிரதீப், தினேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் LPF ஜெயராமன், பரூக், ஸ்டான்லி, ரஞ்சித், சேகர் மற்றும் ஏராளமானவர்கள் உள்ளனர்.

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் விவேகானந்தன் நன்றி கூறினார்.



நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு , பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 6வது மாநில நிதி ஆணையத்தின் கீழ் ரூபாய் 6.10 கோடி மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி, திருவெறும்பூரில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் வே.சரவணன், மேயர் அன்பழகன், திருச்சிராப்பள்ளி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ மண்டல தலைவர் மு. மதிவாணன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன். துணை மேயர் ஜி. திவ்யா, மாவட்ட நகர் ஊரமைப்பு குழு உறுப்பினர் வைரமணி, மாமன்ற உறுப்பினர் எஸ்.சிவக்குமார், மாநகராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தஞ்சை வடக்கு மாவட்டம், குடந்தை மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# பம்பப்படையூர் சமத்துவபுரத்தில் சமத்துவப் பொங்கல் விழா!

## சு.கல்யாணசுந்தரம் எம்.பி. துவக்கி வைத்தார்!

தஞ்சாவூர், ஜன.13 –

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிக்கையினை ஏற்று பாரம்பரிய கலாச்சாரத்துடன் சமத்துவப் பொங்கல் விழா நடைபெற்றது.

ஒன்றியச் செயலாளர் சு.க.முத்துசெல்வம் தலைமையில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவை கழக சட்டத் திட்ட திருத்தக்குழு தலைவர் சு. கல்யாணசுந்தரம் எம்.பி. துவக்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து அனைத்து மதங்களைச் சார்ந்த பொதுமக்கள் புது பானையில் பொங்கலிட்டனர். பின்னர் சமூக நீதிக்கான விளையாட்டு விழா நடைபெற்றது.

விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் பங்கு பெற்றவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களையும் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. வழங்கி வாழ்த்தினார்.

விழாவில் சுவாமிமலை பேரூர்ச் செயலாளர் எஸ்.எம். எஸ்.பாலசுப்ரமணியன், முன்னாள் கவுன்சிலர் பாண்டியன், சசி, ஒன்றியக் கழக நிர்வாகிகள் மணிவாசகம், இளங்கோவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# திராவிடப் பொங்கல் சமூக நீதிக்கான விளையாட்டு விழா!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

*அரியலூர், ஜன. 13 -*

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, அரியலூர் மாவட்ட கழகத்தின் சார்பில் ‘திராவிட பொங்கல் சமூகநீதிக்கான விளையாட்டுத் திருவிழா’ மாவட்ட அளவி லான விளையாட்டுப் போட்டிகளை அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு போட்டியை துவங்கி வைத்தார். பின்னர் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுத் தொகையும், கோப்பையும் வழங்கி வாழ்த்தினார்.

ஏற்கனவே ஒன்றிய மற்றும் நகர அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிவாகை சூடிய சிறந்த அணிகளுக்கான, இந்த மாபெரும் மாவட்ட அளவிலான போட்டிகளை பார்வையிட்டு வீரர் வீராங்கனைகளை வாழ்த்தினார்.

இந்நிகழ்வில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன், மாவட்டப் பொருளாளர் கு.இராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய பொறுப்பாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, மா.அன்பழகன், கோ.அறிவழகன், அசோகசக்ரவர்த்தி, இளையராஜா, அண்ணாதுரை, கணேசன், நகர செயலாளர் இரா.முருகேசன், அருண், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா. பாலு, வி.எம். ஷாஜகான், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.சி. லூயிகதிரவன், அருண் ராஜா, உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, அரியலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் ‘திராவிட பொங்கல் சமூகநீதிக்கான விளையாட்டுத் திருவிழா’ மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு போட்டியை துவங்கி வைத்து வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசுத் தொகையும்,கோப்பையும் வழங்கி பாராட்டினார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், ரூ.3.50 இலட்சத்தில் நாரணமங்கலம்

# அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் விளையாட்டுத்திடல்!

## சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் பார்வையிட்டார்!

*பெரம்பலூர், ஜன. 13 -*

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றியம்,நாரணமங்கலம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் அமைக்கப்பட்டு வரும் விளையாட்டுத்திடலை சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் பார்வையிட்டார். பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு நிதியின் மூலம், நாரணமங்கல்ம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் படிக்கும் மாணவ, மாணவிகள் உடற்பயிற்சி செய்யும் வகையில் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் விளையாட்டுத் திடலை பார்வையிட்ட சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் பணியை விரைந்து முடிக்க வேண்டும் என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், அரசு தொழிற்பயிற்சி முதல்வர் பிரியதர்ஷினி, உடற்கல்வி ஆசிரியர் பிரேம்குமார்,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.அருண், டி. ஆர்.சிவசங்கர்,

மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் கோபாலபுரம் செல்வராஜ்,

மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் தனசேகரன்,ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் பிரபாகரன்,

ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஆனந்தன்,

கிளைச் செயலாளர் வைத்தியநாதன், ராமர் மற்றும் ராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் கடத்தூரில் திராவிட பொங்கல் விழாவின் பகுதியாக ஒன்றிய,பேரூர் கழக அளவில் வெற்றி பெற்ற விளையாட்டு அணிகள் பங்கேற்ற மாவட்ட அளவிலான கிரிகெட் போட்டிகளை தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் துவக்கி வைத்தார். மாநில நிர்வாகி சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன்,ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள் சிவப்பிரகாசம்,பி.எஸ்.சரவணன், எம்.வீ.டி.கோபால், முத்துக்குமார், மாது, சக்திவேல், ஆனந்தன், பி.கே.அன்பழகன், கண்ணபெருமாள், முனியப்பன், கௌதமன், இளைஞர் அணி ஆர்.சிவகுரு மற்றும் கழக நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், பெருநாவலூர், அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், உயர்கல்வித் துறை சார்பில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக “உலகம் உங்கள் கையில்” என்னும் மாபெரும் திட்டத்தின்கீழ், மடிக்கணினிகளை கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு, அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 08.01.2026 அன்று வழங்கினார்கள். உடன், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், நகர்மன்ற துணைத் தலைவர் தி.முத்து (எ) சுப்ரமணியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உதயம் சண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.